## August 18, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கமுதி அருகே பழங்காலப் பொருள்கள், வடிகால் அமைப்புகள் காணப்படுவதால் தமிழக அரசு இந்தப் பகுதியில் அகழாய்வு நடத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.
   i. ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகேயுள்ள ஆனையூர், செங்கமேடு, பேரையூர், மருதங்க நல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் கீழடியில் கிடைக்கப்பெற்ற பழங்காலக் குடுவைகள், பானை ஓடுகள், செங்கல்கள், கட்டுமான அமைப்புகள் கிடைத்தன. இதனால், இந்தப்பகுதியில் தமிழ்நாடு அரசு அகழாய்வு மேற்கொள்ள வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
2. பாகிஸ்தானில் பெய்து வரும் பலத்த மழையால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 650-ஆக அதிகரித்துள்ளதா கவும், காயமடைந்தோரின் எண்ணிக்கை 905-ஆக உயர்ந்துள்ளதாகவும் அந்நாட்டு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (என்டிஎம்ஏ) தெரிவித்தது. மழை, வெள்ளம், நிலச்சரிவு என அடுத் தடுத்த பாதிப்புகளால் மீட்புப் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இருப்பினும், பாகிஸ்தான் ராணுவத்தைச் சேர்ந்த 2,000 வீரர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.
3. ராணுவ பயிற்சி மையங்களில் காயம் காரணமாக மாற்றுத்திறனாளியானதால், அந்த மையங்களில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க உள்ளது.
   i. அண்மையில் ஊடகத்தில் வெளியான தகவலில், கடந்த 1985-ஆம் ஆண்டு முதல் தேசிய பாதுகாப்பு அகாதெமி, இந்திய ராணுவ அகாதமி போன்ற முதன்மையான ராணுவ பயிற்சி மையங்களில் பயிற்சியின்போது காயம்டைந்து மாற்றுத்திறனாளியானதால், அந்த மையங்களில் இருந்து சுமார் 500 பேர் நீக்கப்பட்டனர்.
   ii. அவர்களின் மருத்துவ செலவுகள் அதிகரித்து வருகின்றன. ஆனால் அவர்களின் உடலில் ஏற்பட்ட பாதிப்பை பொருத்து, அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.40,000 வரை அளிக்கப்படும் நிவாரணம், அவர்களின் அடிப் படை தேவைகளை பூர்த்தி செய் வதற்குக்கூட போதுமானதாக இல்லை.
   iii. அவர்கள் முன்னாள் ராணுவ வீரர்களாகக் கருதப்படுவதில்லை. அவ்வாறு கருதப்பட்டால், அது ராணுவ மருத்துவமனைகள் உள்பட தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில் அவர்கள் இலவச சிகிச்சை பெற வழிவகுக்கும்' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
4. அமெரிக்காவில் தொடங்கும் சிங்க்ஃபீல்டு கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் டி.குகேஷ், ஆர்.பி ரக்ஞானந்தா ஆகியோர் களம் காண்கின்றனர்.
5. அமெரிக்காவில் நடைபெறும் சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில், உலகின் நம்பர் 1 வீரரான இத்தாலியின் யானிக் சின்னர் - நம்பர் 2 வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தவுள்ளனர்.
6. தற்போது நடைமுறையில் உள்ள 5%, 12%, 18%, 28% ஆகிய நான்கு விகிதங்களை 5%, 18% என இரண்டு விகிதங்களாக குறைக்கவும், விலை உயர்ந்த 7 பொருள்கள் மீது மட்டும் 40% வரி விதிக்கவும் மாநில நிதியமைச்சர்கள் குழுவுக்கு (ஜிஓஎம்) நிதியமைச்சகம் பரிந்துரைத்தது.
   i. இதுதொடர்பாக ஜிஓஎம் அளிக்கும் ஆலோசனைகளைத் தொடர்ந்து, அடுத்தமாதம் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதியமைச்சர்கள் பங்கேற்கும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ii. 5% மற்றும் 18% என இரு விகிதங்களாக குறைக்க ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல் அளித்தவுடன் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்கும். அதன்பிறகு இந்த இரு விகிதங்களை ஒரே விகிதமாக மாற்றி எளிமையான வரி நடைமுறை அமலுக்கு கொண்டுவரப்படும். இதற்கான தொடக்கமே இந்த ஜிஎஸ்டி 2.0 சீர்திருத்தம்.

7. அமெரிக்காவின் 'ஆக்ஸியம் ஸ்பேஸ்' நிறுவனத்தின் 'ஆக்ஸி யம்-4 'திட்டத்தின்கீழ் கமாண்டரும் நாசா பெண் விஞ்ஞானியுமான பெக்கி விட்சன், போலந்து வீரர் ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி விஸ்னீவ்ஸ்கி, ஹங்கேரி வீரர் திபோர்கபு ஆகியோருடன் இணைந்து சுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்துக்குப் பயணித்தார்.
   i. அமெரிக்காவின் ஃபுளோ ரிடாவில் உள்ள நாசா விண் வெளி மையத்திலிருந்து ஃபால் கன் 9' ராக்கெட் மூலம் 'டிராகன் கிரேஸ்' விண்கலத்தில் இக்குழுவி னர் விண்வெளிக்குச் சென்றனர்.
   ii. 2027-இல் செயல்படுத்தப்ப டவுள்ள இஸ்ரோவின் மனித விண்வெளி பயணத் திட்ட மான 'ககன்யான்' திட்டத் துக்கு அனுபவ ரீதியாக உத வும் வகையில், சுக்லாவின் சர் வதேச விண்வெளி நிலைய பயணத்துக்காக சுமார் ரூ.550 கோடி செலவிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

8. நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒலியை காத்மாண்டுவில் சந்தித்த இந்திய வெளியுறவுத் துறை செயலர் விக்ரம் மிஸ்ரி, பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை மேலும் மேம் படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆலோசித்தார்.
   i. இணைப்பு வசதிகள், வளர்ச் சிக்கான ஒத்துழைப்பு உள்ளிட்டவை முக்கியமாக விவாதிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
   ii. நேபாள பிரதமர் சர்மா ஒலி அரசுமுறைப் பயணமாக அடுத்த மாதம் இந்தியாவுக்கு வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

9. நாட்டிலேயே முதல்முறையாக தமிழகத்தில் இணையவழியில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கும் திட்டத்தை தருமபுரியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
   i. விவசாயிகளின் நலன்கருதி கால தாமதத்தைத் தவிர்க்க, கூட்டுறவு வங்கிகளுக்கு அவர்கள் செல்லாமல், வீட்டில் இருந்தே இணைய வழியில் பயிர்க் கடனுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறையையும், விண்ணப்பித்த அன்றே விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பயிர்க் கடனை நேரடியாக வழங்கும் நடைமுறையையும் தருமபுரியில் தொடங்கப்பட்டது.

10. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**
   i. தலைமைத் தேர்தல் ஆணையர் - ஞானேஷ் குமார்
   ii. நேபாள அதிபர் - ராமசந்திர பௌடேல்

**1447/C 3rd Floor, H Block, Anna Nagar West, Chennai 600040, Tamil Nadu. 9445132221**